திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மடப்புரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள், முன்னிலை : திருமதி.பா.சபர்மதி

ந.க எண்: 1/2024-25 நாள் : 12.06.2024

பொருள் : சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருப்புவனம் வட்டம், மடப்புரம் ஊராட்சி, மடப்புரம் கிராமம் சர்வே எண்கள்:1/3B,3/11,3/12,3/13,4/5A,4/6A,4/7A இல் அமையும் 40178.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது - மனைப்பிரிவிற்கு உத்தரவிடல் - சார்பு

பார்வை :

1. அரசாணை (நிலை) 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3) நாள் : 04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 125 பாகம் III பிரிவு 19 (a) நாள் : 04.05.2017
2. அரசாணை (நிலை) எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3) நாள் : 13.10.2017
3. அரசாணை எண் : 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் : 04.05.2017
4. மனுதாரர் D.கண்ணன், மதுரை என்பவரது இணையதள விண்ணப்ப எண் : SWP-V9V4O3G2/2024 நாள்: 02.03.2024
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை, உள்ளூர் திட்ட குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சிவகங்கை - 630562 அவர்களின் நடவடிக்கைகள், ந.க எண் : SWP-V9V4O3G2/2024/2024/TDP நாள் : 03.06.2024
6. மடப்புரம் ஊராட்சி தீர்மானம் எண் : 45/2024 நாள் : 12.06.2024

********

**உத்தரவு :-**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மடப்புரம் ஊராட்சி, மடப்புரம் கிராமம் சர்வே எண்கள் : 1/3B,3/11,3/12,3/13,4/5A,4/6A,4/7A இல் அமையும் 40178.00 சதுர மீட்டர் பரப்பளவில் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர்த்து 27743.98 சதுர மீட்டர் வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (In principally accepted layout frame) ம.வ.ந.ஊ.து.இ (சிமா) எண் : SWP-V9V4O3G2/2024/2024/TDP நாள் : 03.06.2024 எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் D.கண்ணன், மதுரை என்பவருக்கு பார்வை (5)-இல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்ட குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வளர்ச்சி கட்டணம் பார்வை (3)-இல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதி / திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் : 3 -இன்படி, கூராய்வு கட்டணம் 1000-ஐயும், மற்றும் விதி எண் : 9 -இன்படி, அதிகபட்ச சந்தை மதிப்பின் தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக உள்ளாட்சியில் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவுகளுக்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை (5)-இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பார்வை (5)-இல் காணும் கடிதத்துடன் கீழ்க்காணும் விவரப்படி வளர்ச்சி கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச் சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | நிலத்தின் சந்தை மதிப்பு | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப் பட்டத் தொகை ரூ. | தொகை செலுத்தும் சலான் எண். |
|---|---|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு மேம்பாட்டுக் கட்டணம் (27743.98 ச.மீ) | 20,00,000 | 8,32,320 | 8,32,320 | பலவகை ரசீது எண் :<br>நாள் : 12.06.2024 |

மேற்கண்டவாறு மேம்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ.எண் | பிளாட் எண்கள் | பரப்பளவு (ச.மீ) |
|---|---|---|
| 1. | 1 முதல் 192 வரை | 27743.98 |
| | மொத்தம் | 27743.98 |

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் விவரப்பட்டியல்

1. சாலை மொத்த பரப்பு - 12434.02 ச.மீ
2. மின்சார வாரியம் - 155.86 ச.மீ (0.56%)
3. உள்ளாட்சி அமைப்பு - 158.20 ச.மீ (0.56%)
4. பூங்கா - 2885.49 ச.மீ (10.40%)

<u>நிபந்தனைகள்</u>

1. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.
2. மனைப்பிரிவிற்கு மற்றும் மனைகளுக்கு செல்லும் அனுகுசாலை குறித்தான உரிமம் மற்றும் அகலம் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
3. நீதிமன்ற வழக்குகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின்படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று

மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீதுள்ள தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து உறுதி செய்ய நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4. இம்மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும் நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்த சட்டங்களின் கீழ் கவரப்பட வில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. மனையின் ஊடே உயர் / குறைந்த அழுத்த மின் கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலையின் போக்கில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
6. மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூடின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.
7. இந்த வரன்முறை மனைப்பிரிவிற்கு மட்டுமே பொருந்தும். மனையில் அமையும் கட்டிடத்திற்கு வரன்முறையாக கருதப்படமாட்டாது.
8. உள்ளூர் திட்டக்குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக்கூடாது.
9. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (In principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ, உள்ளாட்சித் துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.
10. மனுதாரரால் கொடுக்கப்பட்ட ஆவணங்களில் தவறோ, அரசு விதிமீறலோ கண்டறியப்பட்டால் மனைப்பிரிவு உரிமம் ரத்து செய்ய ஊராட்சி நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

B. Sabarmathi.
தலைவர்
தலைவர்
மடப்புரம் ஊராட்சி
மடப்புரம் ஊராட்சி
திருப்புவனம் ஒன்றியம்
சிவகங்கை மாவட்டம்

பெறுநர் :

D.கண்ணன்,
த/பெ.தேவராஜ்,
பிளாட் எண் : 16, சேவுகன் செட்டியார் காலனி அருகில்,
ஆத்திக்குளம் மெயின் ரோடு, நாகனாகுளம்,
மதுரை - 625014.

நகல் :

1. மண்டல துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு சிவகங்கை.
2. சார்பதிவாளர் (பதிவுத்துறை), திருப்புவனம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்புவனம்.
4. வட்டாட்சியர், திருப்புவனம் வட்டம், திருப்புவனம்.